14th July 1962]

திரு. முனு-ஆதி : மேய்கால் புறம்போக்கு நிலங்கள் பஞ்சாயத்துக் களிடமும், பஞ்சாயத்து யூனியன்களிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இதில்தான் இன்னும் பஞ்சாயத்துக்களுக்கும் கிராம அதிகாரிகளுக்கும் சிக்கல் நிறைந்திருக் கிறது. அதைப் பஞ்சாயத்துக்கள் எடுத்துக்கொண்டு பராமரிப்பதற்கு அதிகாரம் இல்லை. யார் யாரோ இடையிலே இருப்பவர்கள் புகுந்து அந்த இடங்களில் கொட்டகை போட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த மேய்க்கால் புறம்போக்கு நிலங்களைப் பஞ்சாயத்துக்களிடம் உடனடியாக ஒப்படைப்பதற்கு வேண்டிய முயற்சிகளை அரசாங்கம் எடுப்பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : எனக்கு வந்த தகவல் என்னவென்றால், இந்தப் புறம்போக்கு நிலங்களைப் பஞ்சாயத்து போர்டில் உள்ளவர்கள் அவர்கள் இஷ்டப்பட்டவர்களுக்கு விசேஷ சலுகை காட்டி, அவர்களிடம் கொடுக்கிறார்கள் என்பதுதான். ரொம்ப நாட்களாக அனுபவித்து வரும் ஏழைகளுக்குப் பாதகம் இல்லாமல் செய்யவேண்டும் என்றுதான் அரசாங்கம் நினைக்கிறது.

Village officers

* 306-G *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the exact status of the village officers; and

(*b*) whether they are treated as Government servants or honorary officers?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) and (*b*) The village officers in this State, excepting the transferred personnel in Kanyakumari district and the Shencottah taluk of Tirunelveli district, are regarded as part-time Government servants. The Village Officers in Shencottah taluk of Tirunelveli district and in the Kanyakumari district are full-time Government servants.

குண்டாறு (அணைக்கட்டுதல்)

* 306 எகேள்வி:—**திரு பி. முருகையன் :** கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள குண்டாற்றில் அணைகட்டத் திட்டம் உண்டா ?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

திரு பி. முருகையன் : இந்த ஊரில் தற்சமயம் மண் அணை இருந்து, அதன் மூலம் இரண்டு ஏரிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சப்பட்டு, விவசாயம் நடைபெறுகிறது. இந்த மண் அணையைக் கல்லணையாக மாற்றி அமைக்க வழி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இந்த மாதிரி அணை கட்டலாம் என்று யோசனைபண்ணி ஏற்கனவே பரிசீலனை பண்ணியிருக்கிறார்கள். அதற்கு ரூ. 75,000 செலவு ஆகும் என்று கணக்குப் போட்டு இருக்கிறார்கள். ஆனால், ஆயக்கட்டுதாரர்கள் 'பெடர்மெண்டு லெவி' கொடுக்காததால், இது கைவிடப்பட்டது.

தாலுகா ஆபீசுகளுக்குப் பொது ஜனத் தொடர்பு அதிகாரி

* 306 ஐ கேள்வி:—**திரு எம். எஸ். செல்வராஜன் :** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில் அளிப்பாரா—